மேலும் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி அவர்களுக்கு முன்னாக

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319413

1. District : இராமநாதபுரம் PS: மாவட்ட குற்ற புலனாய்வு காவல்நிலையம் Year: 2025 FIR No.: 11/2025 Date: 18.06.2025
மாவட்டம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: இந்திய தண்டனை சட்டம் Sections பிரிவுகள்: 120(B), 167, 420 and 109 IPC

(ii) Act சட்டம்: மாநில சுகாதார திருத்தச்சட்டம் 2018 Sections பிரிவுகள்: 13(1)(a) r/w 13(2) and 12 of PC Act, 2018

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 2021 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் to நாள் வரை
2022

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.06.2025 நேரம் 14.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் பதிவு தி-I நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் முதற்கட்ட விசாரணை அறிக்கையில் (PE 17/2024/RDP/RM)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தொண்டி மாரியாட்சி தாலுகா

Beat Number : (b) Address : சிவியிலிருந்து காரங்காடு பாலம் வரையான பகுதி
முறைக் காவல் எண் முகவரி சுமார் 13 கி.மீ வடக்கே

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : மு. கமலாசன் (b) Father's/ Husband's Name : முத்துராமலிங்கம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 20.8.1975 நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address :
தொழில் கூலி வேலை செய்பவர் முகவரி மாரியூர் கடற்கரை மற்றும் கண்காணிப்புப்பணி, இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

எதிரிகளின் பெயர் விவரங்கள் வரிசை எண். 12-ல் குறிப்பிடப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

எதிரிகள்:-

1. திரு.S. செயுகப்பெருமான், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர், கிராம ஊராட்சி, இராமநாதபுரம் ஊராட்சி ஆணையம், இராமநாதபுரம் மாவட்டம்.

2. திரு.S.M. கணபதி சுப்பிரமணியன், முன்னாள் உதவி பொறியாளர், இராமநாதபுரம் ஊராட்சி ஆணையம், இராமநாதபுரம் மாவட்டம்.

3. திரு. A. கல்யாணசுந்தரம், முன்னாள் உதவி செயற்பொறியாளர், இராமநாதபுரம் ஊராட்சி ஆணையம், இராமநாதபுரம் மாவட்டம்.

4. திரு. R. வெங்கடேஷ்வரன், த/பெ ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், 1/124, அரியாங்கோட்டை அஞ்சல், ஆர். எஸ். மங்கலம் தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2(s) கூறப்பட்டுள்ள பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் மு. இராமசந்திரன் பதவி DSP ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18/06/2025

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்

18.06.2025 - 10.00 மணி

Name: பெயர் மு. தமரேசன்
Rank: நிலை ..... No. எண் .....
சார்பு ஆய்வாளர்
உ.நு.கு. மாவ.
இராமநாதபுரம்.

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.11/2025 ச/பி 120(B), 167, 420 மற்றும் 109 இந்திய தண்டனை சட்டம் மற்றும் பிரிவு 13 (1) (a) r/w 13 (2) மற்றும் 12 ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 வழக்கின் தொடர்ச்சி :–

பணிந்து சமர்ப்பிக்கிறேன்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக விழிப்பு அறிக்கை எண்.44/2023/RDP/RM அடிப்படையில் குற்ற அலுவலர்கள் மீதுள்ள குற்றச்சாட்டு தொடர்பான முதல்நிலை விசாரணை தொடர்ச்சியாக இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களின் குறிப்பாணை எண் PE 17/2024/RDP/RM நாள்: 19.03.2025–ன்படி காலம் 7ல் கண்ட எதிரிகள் மீது குற்ற எண்.11/2025 ச/பி 120(B), 167, 420 மற்றும் 109 இந்திய தண்டனை சட்டம் மற்றும் ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 பிரிவு 13 (1) (a) r/w 13 (2) மற்றும் 12 ன்படி 18.06.2025ம் தேதி 14.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட வழக்கின் குற்ற விவரமானது :–

எதிரி–1 திரு.S.சேவுகப்பெருமாள் என்பவர் கடந்த 16.06.2021 முதல் 26.02.2024 வரை இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் கிராம பஞ்சாயத்து வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து கடந்த 27.02.2024ஆம் தேதி தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு, அதன் தொடர்ச்சியாக கடந்த 31.10.2024ம் தேதி முதல் Not Allowed to Retire செய்யப்பட்டுள்ளார்.

எதிரி–2 திரு.S.M.கணபதி சுப்பிரமணியன் என்பவர் கடந்த 26.11.2021ஆம் தேதி முதல் 08.07.2024 வரை இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் உதவி பொறியாளராக பணிபுரிந்து, தற்போது 10.07.2024 ஆம் தேதி முதல் நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உதவி பொறியாளராக பணிபுரிந்து வருகிறார்.

எதிரி–3 திரு.A.கல்யாணசுந்தரம் என்பவர் கடந்த 19.09.2019ஆம் தேதி முதல் 20.01.2024 வரை இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து, தற்போது திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சாலைகள் மற்றும் பாலங்கள் பிரிவில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி 1 முதல் 3 எதிரிகள் ஊழல் தடுப்பு (திருத்தச்) சட்டம், 2018 ச/பி 2 (c)யின்படி பொது ஊழியர் ஆவார்கள்.

எதிரி–4 திரு.வெங்கடேஷ்வரன் சம்பவ காலத்தில் இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக இருந்துள்ளார். இவர் தனிநபர் ஆவார்.

இராமநாதபுரம் மாவட்டம், தொருவளூர் கிராம ஊராட்சியில் 2018–2019ம் ஆண்டிற்கான பிரதம மந்திரி ஆதர்ஷ் கிராம யோஜனா திட்டத்தின்கீழ் 2021–2022ம்

ஆண்டில் தொருவளூர் பஞ்சாயத்து காவிரி சம்ப் முதல் காரேந்தல் பாலம் மெயின்ரோடு வரை ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியில் ரூ.1,59,091/– மதிப்புள்ள பணியை செய்யாமல் அப்பணி நடைபெற்றதாக எதிரி–1 திரு.சேவுகப்பெருமாள், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர், கிராம பஞ்சாயத்து, இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம் என்பவர் அதற்கான நிதியை ஒப்பந்ததாரருக்கு விடுவித்தும், எதிரி–2 திரு.S.M.கணபதி சுப்பிரமணியன், முன்னாள் உதவி பொறியாளர், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம் என்பவர் அளவீட்டுப்புத்தகம் எழுதியும், எதிரி–3 திரு.கல்யாண சுந்தரம், முன்னாள் உதவி செயற் பொறியாளர், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம் என்பவர் Check Measurement செய்தும் மற்றும் எதிரி–4 திரு.வெங்கடேஷ்வரன் என்பவர் ஒப்பந்ததாரர் வேலை செய்யாமல் தனது வங்கி கணக்கில் நிதியை பெற்றும் மற்றும் எதிரிகள் கூட்டாக சேர்ந்து மேற்படி நிதியை கையாடல் செய்து அரசுக்கு பண இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள்.

கடந்த 26.02.2021 ஆம் தேதி இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், தொருவளூர் ஊராட்சியில் தொருவளூர் காவேரி சம்ப்பிலிருந்து காரேந்தல் பாலம் மெயின் ரோடு வரை பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு ரூ.20 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி (Administrative Sanction) வழங்கப்பட்டு, அதன்படி 04.06.2021ஆம் தேதி விரிவான மதிப்பீட்டு அறிக்கை (Detailed Estimate) தயார் செய்யப்பட்டு அதற்கு கடந்த 07.06.2021 ஆம் தேதி தொழில்நுட்ப அனுமதி (Technical Sanction) வழங்கப்பட்டு பின்னர் மேற்படி மதிப்பீட்டிற்கு கடந்த 28.11.2022ஆம் தேதி ரூ.20 லட்சத்திற்கு Working Estimate தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி Working Estimate ல் ரூ.19,98,368/–க்கு Total Value of Work நடைபெற்றுள்ளதாக கடந்த 01.12.2022 ம் தேதி அளவீட்டு புத்தகம் பக்கம் 18ல் 2வது எதிரி எழுதியுள்ளார். மேற்படி அளவீட்டு புத்தகத்தில் எழுதியுள்ள பணிகளை திரு.குருதிவேல்மாறன், செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், இராமநாதபுரம் மற்றும் திரு.இரவீந்திரன், உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம், முதுகுளத்தூர் ஆகியோர் கடந்த 01.08.2024 மற்றும் 28.08.2024 ஆகிய தேதிகளில் மேல் சோதனை ஆய்வு (Supercheck) செய்ததில் அந்த Total Value of Work ல் ரூ.1,59,091/– மதிப்பிற்கான 50.56 m2 Interlocking Concrete Paver Block மற்றும் 23.86 m3 Cement Concrete 1:4:8 40mm Jelly ஆகிய பணிகள் செய்யப்படவில்லை என அறிக்கை அளித்துள்ளார்கள்.

அளவீட்டு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் முழுமையாக செய்யப்படாத நிலையில் அப்பணிகள் முழுமையாக செய்து முடிக்கப்பட்டுள்ளதாக Completion Report மற்றும் Contract Certificate–ல் 01.12.2022 ம் தேதி 2வது எதிரி கையொப்பம் செய்துள்ளார்.

அளவீட்டு புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள ரூ.19,98,368/– மதிப்பிற்கான பணி முழுமையாக நடைபெறாத போது அப்பணி முழுமையாக நடைபெற்றதாக 3வது எதிரி திரு.கல்யாணசுந்தரம், உதவி செயற்பொறியாளர் Check Measurement செய்தும், அந்நிதியை ஒப்பந்ததாரருக்கு விடுவிப்பதற்காக கடந்த 06.12.2022 ம் தேதி அளவீட்டு புத்தகம் பக்கம் 19 ல் Counter Sign செய்துள்ளார். மேலும் அதே தேதியில் ரூ.19,98,368/–க்கான பணி முடிவடைந்துள்ளதாக Work Completion Report மற்றும் அதே தொகைக்கான Total Value of Work நடைபெற்றுள்ளதாக அதே தேதியில் Contract Certificate ல் கையொப்பம் செய்துள்ளார்.

அளவீட்டு புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள ரூ.19,98,368/– க்கான பணி முழுமையாக நடைபெறாத போது அப்பணி முழுமையாக முடிவுற்றதாக 09.12.2022 ம் தேதி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களுக்கு 1வது எதிரி அறிக்கை அனுப்பி பின்னர் அப்பணிக்கான அலுவலக பிடித்தம் ரூ.1,29,911/– போக ரூ.18,68,457/–க்கான நிதியை 4வது எதிரிக்கு கடந்த 01.02.2023ஆம் தேதி 1வது எதிரி விடுவித்து அளவீட்டு புத்தகம் பக்கம் 20 ல் Pass Order எழுதியுள்ளார். மேலும் மேற்படி நிதியை அதே தேதியில் PMAGY Fund யிலிருந்து ECS மூலமாக 4வது எதிரிக்கு விடுவித்ததாக 1வது எதிரி Contract Certificate ல் எழுதியுள்ளார்.

மேற்படி ரூ.20 லட்சம் மதிப்பீட்டிற்கான பணிக்கு கடந்த 23.07.2021 ம் தேதி 1வது எதிரி ஒப்பந்ததாரரான 4வது எதிரிக்கு வேலை உத்தரவு வழங்கியுள்ளார். அந்த மதிப்பீட்டில் Total Value of Work செய்யப்பட்டதாக கூறும் தொகை ரூ.19,98,368/– ல் GST மற்றும் அரசு பிடித்தம் ரூ.1,29,911/– போக ரூ.18,68,457/–ஐ 4வது எதிரியின் வங்கி கணக்கிற்கு கடந்த 01.02.2023ஆம் தேதி 1வது எதிரி விடுவித்துள்ளார்.

மேற்படி மதிப்பீட்டுத்தொகை ரூ.20 லட்சத்தில் Total Value of Work ரூ.19,98,368/–ல் ரூ.1,59,091/–க்கான பணி நடைபெறாத நிலையில் Total Value of Work ரூ.19,98,368/–க்கான பணிகள் நடைபெற்று இருப்பதாக 2வது எதிரி அளவீட்டு புத்தகத்தில் சரியில்லை என்று தெரிந்தே பொய்யாக எழுதியும், அப்பணிகள் முழுமையாக நடைபெற்றுள்ளதாக 3வது எதிரி திரு.கல்யாணசுந்தரம், முன்னாள் உதவி செயற்பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலகம், இராமநாதபுரம் அவர்கள்

Check Measurement செய்தும், 4வது எதிரி செய்யாத பணிகளுக்கும் சேர்த்து பிடித்தம் போக ரூ.18,68,457/–ஐ 4வது எதிரி ன் வங்கி கணக்கிற்கு 1வது எதிரி விடுவித்துள்ளார். மேற்சொன்ன எதிரிகள் கூட்டாக சேர்ந்து தொருவளூர் ஊராட்சியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியில் ரூ.1,59,091/–க்கு பணி நடைபெறாத நிலையில் அரசை ஏமாற்றும் நோக்கத்தோடு மோசடி செய்து மேற்படி தொகையை எதிரிகள் ஒருவருக்கொருவர் உடந்தையாக இருந்து கையாடல் செய்து அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தியுள்ளார்கள்.

மேலும் மேற்படி 1 முதல் 3 எதிரிகள் குற்ற வழக்கு பதிவு செய்ய 17 (A) (1) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம், 2018–ன்படி The Additional Chief Secretary to Government, Rural Development and Panchayat Raj (E2) Department in G.O.(3D) No.12 நாள்:06.03.2025 பிரகாரம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆகவே, 1 முதல் 4 எதிரிகள் மீது மேற்படி அரசுத்தொகையை முறைகேடு செய்ததற்காக அவர்கள் மீது இந்திய தண்டனை சட்டம் ச/பி 120(B), 167, 420 மற்றும் 109 படியும் மற்றும் ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 பிரிவு 13 (1) (a) r/w 13 (2) மற்றும் 12 ன்படியும் வழக்குப்பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலை தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிமன்றம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

18.06.2025

கருவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்.